## கூட்டுறவுச் சங்கங்களுக்கான இரண்டாம் கட்டத் தேர்தல்

## 4575 சங்கங்களில் போட்டியின்றி தேர்வு

## தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான இரண்டாம் கட்டத் தேர்தலில் 4575 சங்கங்களில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம. ரா. மோகன், இ.ஆ.ப. (ஓய்வு) தெரிவித்துள்ளார். மொத்தம் 44057 பேர் இவ்வாறு நிர்வாகக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

### இரண்டாம் கட்டத் தேர்தல்

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஐந்து நிலைகளில் நடைபெறும் என்றும், முதல் நிலையில் 22,192 சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநில தேர்தல் ஆணையம் ஏற்கெனவே அறிவித்து இதற்கான அட்டவணையையும் வெளியிட்டிருந்தது. இதன்படி இரண்டாம் கட்டத்தில் தேர்தல் 5269 சங்கங்களில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான வேட்பு மனுக்கள் 4.4.2013 அன்று பெறப்பட்டன. நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க பெறப்பட்ட 60302 வேட்புமனுக்களில் பரிசீலனையின்போது 5575 வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது போக 54727 வேட்பு மனுக்கள் செல்லத்தக்கவை என அறிவிக்கப்பட்டன. 5.4.2013 அன்று 4848 வேட்பு மனுக்கள் திரும்பப் பெறப்பட்டபின் இறுதியாக 49879 வேட்புமனுக்கள் செல்லத்தக்கவை என அறிவிக்கப்பட்டன.

**போட்டியின்றி தேர்வு**

இரண்டாம் கட்ட தேர்தலில் 4575 சங்கங்களுக்கு நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுப்பப்பட்டுள்ளனர். போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட 44057 நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 6549 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலும் 13088 பேர் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களிலும் மீதம் 24420 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் 411 சங்கங்களில் ஒரு இடத்திற்குக்கூட வேட்பு மனு பெறப்படவில்லை.

## கூட்டுறவுச் சங்கங்களுக்கான முதல்நிலை – இரண்டாம் கட்டத் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் விபரம்

| செயற்பதிவாளர் பெயர் | **இரண்டாம் கட்டத்** தேர்தல் நடைபெற வேண்டிய சங்கங்கள் | வேட்பு மனுக்கள் பெறப்படாத சங்கங்கள் | வேட்பு மனு பெறப்பட்ட சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்ட சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க 12.04.2013 அன்று தேர்தல் நடைபெற உள்ள சங்கங்கள் |
|---|---|---|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 1745 | 12 | 1733 | 1500 | 233 |
| தொழில் வணிகத்துறை ஆணையர் | 100 | 6 | 94 | 90 | 4 |
| மீன் வளத்துறை ஆணையர் | 48 | - | 48 | 44 | 4 |
| கதர் கிராமத் தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் | 29 | - | 29 | 29 | - |
| கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் | 28 | - | 28 | 28 | - |
| கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | 339 | 9 | 330 | 327 | 3 |
| பால்வளத்துறை ஆணையர் | 2490 | 383 | 2107 | 2080 | 27 |
| பதிவாளர் (வீட்டுவசதி) | 211 | - | 211 | 203 | 8 |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் | 13 | 1 | 12 | 12 | - |
| சமூக நலத்துறை இயக்குநர் | 48 | - | 48 | 47 | 1 |
| பட்டுப்பூச்சி வளர்ப்புத்துறை இயக்குநர் | 9 | - | 9 | 8 | 1 |
| பனைவெல்ல அபிவிருத்தி வாரியம் | 209 | - | 209 | 207 | 2 |
| மொத்தம் | 5269 | 411 | 4858 | 4575 | 283 |

<u>தேர்தல் நாள்</u>

இரண்டாம் கட்டத்தில் 283 சங்கங்களுக்கு மட்டும் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த இரண்டாம் கட்டத் தேர்தல் 12.4.2013 அன்று நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவு காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது. இரண்டாம் கட்டத்தில் தேர்தல் நடைபெறும் 283 சங்கங்களில் 529 உறுப்பினர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன ஒதுக்கீட்டின் கீழும், 810 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும் 1870 உறுப்பினர்கள் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மொத்தம் 3209 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதற்கு 6138 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

<u>முதல்கட்ட தேர்தல் வாக்குப்பதிவு</u>

முதல் கட்டத் தேர்தலில் தேர்தல் வாக்குப்பதிவு 5.4.2013 அன்று நடைபெற்றது. மொத்தம் 339458 வாக்காளர்களில் 166275 பேர் வாக்களித்தனர். வாக்கு அளித்தவர்களின் சதவீதம் 49 சதவீதம் ஆகும்.

<u>வாக்கு எண்ணிக்கை</u>

5.4.2013 அன்று நடைபெற்ற முதல்கட்ட தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை 9.4.2013 அன்று நடைபெறவுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும். வாக்குகள் தொடர்ந்து எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

<u>காவல்துறை பாதுகாப்பு</u>

முதல் கட்ட தேர்தலில் வாக்குப்பதிவு நடைபெற்ற சங்கங்களில் வாக்குப்பெட்டிகள் காவல்துறை பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணிக்கையின்போதும் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழாமல் தடுக்க காவல்துறை மூலம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

<u>மூன்றாம் கட்டம் மற்றும் நான்காம் கட்ட தேர்தல்</u>

மூன்றாம் கட்டத் தேர்தல் 19.4.2013 அன்று நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனுத்தாக்கல் 9.4.2013 அன்று நடைபெறவுள்ளது. நான்காம் கட்டத் தேர்தல் 27.4.2013 அன்று நடைபெறவுள்ளது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் 15.4.2013 அன்று நடைபெறவுள்ளது.

இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம. ரா. மோகன், இ.ஆ.ப (ஓய்வு) தெரிவித்துள்ளார்.

8.4.13

**ஆணையர்**